**IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT**

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | **115/2024** |
| | | P/W's | : | **PW1** |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | தவமணி | CASTE | : | |
| S/O | கருப்பணன் | RELIGION | : | இந்து |
| VILLAGE | தனிச்சியம் | CALLING | : | |
| TALUK | வாடிப்பட்டி | AGE | : | 67 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 10.10.2025**

**குறுக்கு விசாரணை**

1. என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் மனுவில் உள்ள சங்கதிகளை விட கூடுதலாக சங்கதிகளை சேர்த்துள்ளேன் என்றால் ஞாபகமில்லை. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் எதுவும் மனுச்சொத்தில் நான் உழவடைதாரர் என்பதை நிரூபணம் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள 16 ஆவணங்களில் எந்த ஆவணம் நான் உழவடைதாரர் என்பதை காட்டுகிறது என்றால் அனைத்து ஆவணங்களிலும் நான் உழவடைதாரர் என்பதைக்காட்டுகிறது.

2. நான் வாடகையாக தந்ததாக சொல்லப்பட்டுள்ள நெல்மூடைகளுக்கு ரசீது தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்கு வடபுரம் உள்ள நிலங்கள் வீட்டடி மனையாக மாறிவிட்டது. எனது வாக்குமூலத்தில் 9 வது பத்தியில் மனுச்சொத்திற்கான பாசன வாய்க்கால் 2015 ம் ஆண்டிலிருந்து தடுக்கப்பட்டதாகவும் மேலும் 10 வது பத்தியில் அது தற்போதுவரை அகற்றப்படாமல் உள்ளது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

3. பிரதிவாதிகள் நான் வழக்குச்சொத்திற்குள் நுழைவதை தடுத்ததாக 10 வது பத்தியில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வழக்குச்சொத்திற்கு பாதை ஏற்படுவதற்கு பாலம் கட்ட அனுமதி பெறப்பட்டுள்ளது என்றால் இன்னும் பாலம் கட்டவில்லை. செல்லையாத்தேவர் என்பவர் எனது வீட்டின் ஒரு பகுதியை வாடகைக்கு இருந்து மனுச்சொத்தை பார்வையிடுவார் என்றால் சரியல்ல. பாலம் கட்டுவதற்கான அனுமதி எனது வீட்டின் முகவரிக்கு செல்லையாத்தேவர் பெயரில் சார்வாகி உள்ளது என்றால் சரியல்ல.

4. எனது வழக்கை தாக்கல் செய்வதற்கு 2 மாதங்களுக்கு முன்தான் என்னை உழவடைதாரர் என்று பதிவு செய்யுமாறு வாடிப்பட்டி வட்டாட்சியரிடம் மனு கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. முன்பே கொடுத்துவிட்டேன். செல்லையாத்தேவர் 2017 ல் இறந்தார். அவர் இறக்கும் வரை அவரிடம் தான் வாடகையான நெல்மூட்டைகளை கொடுத்துவந்தேன் என்றால் சரிதான். மனுச்சொத்து தற்போது 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றாலும் அவர்கள் அனுபவம் செய்கிறார்கள் என்றாலும் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டு நான் அனுபவம் செய்துவருகிறேன்.

5. மனுச்சொத்து எனது அனுபவத்தில் உள்ளது என்பதைக்காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. செல்லையாத்தேவரின் அப்பா பெயர் சின்னச்சாமி தேவர். எனது வாக்குமூலத்தில் வழக்குச்சொத்திற்கு எனது சொத்தின் வழியாகத்தான் செல்லவேண்டும் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது சொத்தின் வழியாகத்தான் செல்லவேண்டும் என்பதால் தாவா சொத்தை குறைந்த விலைக்கு கிரையம் கேட்டு பிரதிவாதிகள் மறுத்ததால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

6. நான் குற்றவியல் வழக்குச்சம்பந்தமாக தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் இந்த மனுவிற்கு சம்பந்தமில்லாதவை என்றால் சரியல்ல. செல்லையாத்தேவர் 5 ம் பிரதிவாதியும் பினாமி என்பதைக்காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 2017 லிருந்து பிரதிவாதிகள் என்னை மனுச்சொத்தின் அனுபவத்தில் இடையூறு செய்வதாக சொல்லியுள்ள நிலையில் அப்போதிலிருந்தே வாடகை தருவதற்கான ரசீது கேட்டு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

//True copy//
Sd/-M.P.Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி